Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (23-1-66) இதழ் 844

விசுவாவசு தை 10 மயூரான மறை 30 ஞாயிற்றுக்கிழமை

மில்க் வைற்
நீல சோப்
10 சதம்
கட்டியை வாங்கி
அதிக லாபமடையுங்கள்

## 1000 பேர் செல்லும் விமானம்

வாஷிங்டன், ஜன. 22

''ஸி—57'' என்ற அமெரிக்க விமானம், விமான போக்குவரத்து சேவையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விமானத்தில் ஆயிரம் பிரயாணிகள் ஏறிச் செல்லலாம். இவ்விமானம் பூர்த்தியாகும் நிலையில் உள்ளது.

# கடத்தல் மோசடிகள்

## சிங்கப்பூர் - கொழும்பு இடையே தீவிரம்

### சரக்குக்கப்பலில் ரூ. 2,00,000 பெறுமதி கடிகாரங்கள்?

பம்பலப்பிட்டி, சனி

சட்டவிரோதக் கடத்தல் மோசடிகளில் பெரும் திருப்பம் ஏற்பட்டிருப்பது இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருட காலமாக இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெற்றுவந்த கடத்தல் நடவடிக்கைகள் இப்பொழுது சிங்கபூரையும் எட்டிப்பிடித்திருப்பதாகவும் சிங்கப்பூருக்கும் கொழும்புக்குமிடையே நேரடியான கடத்தல் மோசடிகள் நடைபெறுவதாகவும் கொழும்பு சுங்கப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

சிங்கப்பூரிலிருந்து, கைக் கடிகாரங்களும் மற்றும் பல பொருள்களும், கொழும்புக்கு சட்டவிரோதமாக வரவழைக்கப்படுகின்றன என்றும் கொழும்பிலிருந்து சிங்கப்பூருக்கு மிளகு உட்பட பல பொருள்களும் பொய்யான தஸ்தாவேஜுகள்மூலமாக அனுப்பப்பட்டுவருகின்றன என்றும் சுங்கப் பகுதி அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிங்கப்பூரிலிருந்து 200000 ரூபாய் பெறுமதியான கைக் கடிகாரங்களைக் கொழும்புக்கு கடத்தியது சம்பந்தமாக விசாரணை செய்யும் பொருட்டு கொழும்புக் கோட்டையைச் சேர்ந்த பிரபல நகைவியாபாரியொருவர் சுங்கப்பகுதிக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தார்.

இந்தக் கைக்கடிகாரங்கள், ஒரு சரக்குக்கப்பல் மூலம் சிங்கப்பூரிலிருந்து கொழும்புக்குக் கடத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் ஒரு கடத்தல் வழக்கு சம்பந்தமாக விசாரணைகள் நடத்த சிங்கப்பூர் சென்றிருந்த இலங்கைப் பொலிஸ் துப்பறியும் கோஷ்டியினர் பொய்யான தஸ்தாவேஜுகள் முலமாக இங்கிருந்து சிங்கப்பூருக்கு பல பொருள்கள் அனுப்பப்படுவதைக் கண்டுபிடித்தனர். சிங்கப்பூருக்கும் கொழும்புக்குமிடையே நீண்டகாலமாக நடைபெற்றுவரும் கடத்தல் மோசடிகளைக் கண்டுபிடிப்பதில் இப்பொழுது தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

## திருமலை நகரசபை கலைக்கப்படும்?

திருகோணமலை, சனி

திருகோணமலை நகரசபையைக் கலைத்து விசேஷ கமிஷனரின் பொறுப்பில் சிறிது காலம் விடுவது பற்றித் தாம் ஆலோசித்து வருவதாக ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.

நகரசபையின் தற்போதைய நிதிநிலைமை மோமாயுள்ளதென்றும் இந்நிலைமையில் மாநகரசபை அந்தஸ்து கொடுக்க முடியாதென்றும் தற்போதைய நகரசபையை கலைத்து விசேஷ கமிஷனரின் பொறுப்பில் சிறிது காலம் விட்டு நிதி நிலைமை சீர்திருத்திய பின்னர்தான் மாநகரசபை அந்தஸ்து கொடுப்பது பற்றியும் தான் யோசித்து வருவதாகத் தெரிவித்தார்.

அண்மையில் இருமாநகரசபை அலுவல்கள் பற்றி விசாரணை நடத்திய ஸ்தலஸ்தாபன அமைச்சின் உதவிக்கரியதரிசியின் அறிக்கையைத் தான் இன்னும் பார்க்கவில்லையென்றும் விரைவில் அவ்வறிக்கையைப்பரிசீலனை செய்யவிருப்பதாகவும் அதற்கிடையில் கணக்காளர் ஒருவரை அனுப்பி நகரசபை நிதி நிலைமை பற்றி அறியவிருப்பதாகவும் அதன் பின்னரே இதுபற்றி இறுதி முடிவு எடுக்கப்படுமென்றும் அமைச்சர் நகரசபை நிலைமை பற்றி தன்னைச்சந்தித்து முறையிட்டுக் கொண்டவர்களிடம் எடுத்துரைத்தார்.

## நைஜீரிய பிரதமரின் சடலம் காணப்பட்டது

லாகோஸ், ஜன. 22

கடத்திச் செல்லப்பட்ட நைஜீரியப் பிரதமர் அல்ஹாசி சர் அபூபக்கர் தபாவா பலேவாவின் மரணத்தை ராணுவ அரசாங்கம் வருத்தத்துடன் அறிவித்திருக்கிறது.

அரசாங்க அலுவலகங்களை மூடுமாறும், கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்கவிடுமாறும் இன்று உத்தரவிடப்பட்டது.

53 வயதான பலேவா, 1957-ம் ஆண்டுமுதல் பிரதமராகப் பதவிவகித்தார்.

மரணம் எப்படிச் சம்பவித்தது என்பது பற்றியோ, சடலம் எங்கே கண்டுபிடிக்கப்பட்டது என்பது பற்

(6-ம் பக்கம் பார்க்க)

### அடுத்த 7 நாட்கள்

- ஜன. 24 திங்கள்: சர் வின்சன்ட் சேர்ச்சில் நினைவு தினம், ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள், அரசாங்க, வங்கி விடுமுறை
- ஜன. 25 செவ். சின்னப்பர் திருநாள், குமாரசாமிப்புலவர் மறைவு தினம்.
- ஜன. 26 புதன்: இந்திய குடியரசு தினம்.
- ஜன. 27 வியா: தியாகராஜ சுவாமிகள் குரு பூசை.
- ஜன. 28வெள்: போயா தினம்.
- ஜன. 29 சனி: அட்டமி.
- ஜன. 30 ஞாயிறு; மகாத்மாகாந்தியடிகள் அமர தினம், நவமி.

## சுவீப் முடிவுகள் 52 J 0028 அதிர்ஷ்ட டிக்கட்

கொழும்பு, சனி

எழுபத்தி மூன்றாவது இலக்கசுவீப்பில்; 52 J 0028 என்ற டிக்கட்டைப் பெற்றுக்கொண்டவர் லட்சாதிபதியானார்.

நேற்று இழுக்கப்பட்ட 73-வது இலக்க சுவீப் முடிவுகள் வருமாறு:

முதற்பரிசு

52 J 0028 ரூ. 1, 00, 000

இரண்டாம்பரிசு

02 C 0541 ரூ. 40, 000

மூன்றும் பரிசு

59 U 0299 ரூ. 10,000

## புதிய தலைவர் தெரிவு

யாழ்ப்பாணம், சனி

எழுவைதீவுக் கிராமசபையின் விசேட கூட்டத்தில் திரு. வைத்திலிங்கம் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## யாழ்ப்பாணத்தில் பிரபல திருமணம்

யாழ்ப்பாணம் எம். பி. யும், தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. சி, ஸ்ரீமதி பொன்னம்பலம் ஆகியோரின் ஏகபுதல்வி செல்வி (டாக்டர்) விஜயலட்சுமிக்கும், இலங்கைப் பல்கலைக்கழக பொறியியல் விரிவுரையாளர் திரு. த. சிவப்பிரகாசபிள்ளையின் புதல்வர் செல்வன் (கலாநிதி) பிரம்மனுக்கும் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நேற்று நடைபெற்ற கோலாகலத் திருமணம் நகரின் முக்கிய நிகழ்ச்சியாக விளங்கியது.

பல்லாயிரம் ரூபாய் செலவில் இந்தியாவிலிருந்து விசேஷமாக தருவிக்கப்பட்ட மஞ்சள் செவ்வந்திப் பூக்களாலும், மருக்கொழுந்தாலும் பாலிக்கப்பட்டிருந்த மணவறையும், புஷ்பங்கள், மலர் மாலைகளால் வர்ண ஜாலங்களுடன் அலங்கரிக்கப்பட்டிருந்த நகரமண்டபமும் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது.

சுமார் 7 மணிக்கு பி.ஏ. தம்பி ஒழுங்கையிலுள்ள பிரபல வழக்கறிஞரும், சைவப் பெரியாருமான தனது பெரியதந்தை திரு. த. முத்துச்சாமிப்பிள்ளையின் இல்லத்திலிருந்து மணமகன், உற்றார், உறவினர், நண்பர்கள் புடைசூழ யாழ். நகரமண்டபம் அடைந்தார். மணமகனுக்குரிய மரியாதையுடன் அவர் மணமண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்

சட்டநாதக் கோயில் பிரதம குருக்கள் தலைமையில் சுமார் 10 அந்தணர்கள் வேதமந்திரங்கள் ஜபிக்க காலை 8 மணிக்கும் 9 மணிக்குமிடையே திருமங்கல்ய தாரணம் நடைபெற்றது.

திருமணச் சடங்குகளுக்குப்பின் நூற்றுக்கணக்கான உறவினர்களும், மற்றவர்களும் அறுகரிசி தூவி ஆசீர்வாதம் செய்தனர்.

மணமகன் பிரம்மன், வெள்ளை ஷெர்வானியும், சரிகை உத்தரீயமும், தங்கச் சரிகையுடன் கூடிய தலைப்பாகையும் அணிந்திருந்தார், மாப்பிள்ளைத் தோழரும் இதே உடையுடன் காட்சியளித்தார்.

விலை உயர்ந்த, பெறுமதியான, முற்றும் சரிகைகளால் இழைக்கப்பட்ட கூறையை மணப்பெண் அணிந்திருந்தார். முற்றும் வைரங்களால் செய்யப்பட்ட ஆபரணங்கள் அவரை அலங்கரித்தன.

உறவினர்களும், நண்பர்களும், யாழ்ப்பாணத்தின் பிரமுகர்கள் அத்தனைபேரும் ஏராளமான பொதுமக்களும் மட்டுமின்றி, கொழும்பிலிருந்தும் பல நண்பர்களும், பிரமுகர்களும் இந்தத் திருமணச்சடங்கில் கலந்து கொண்டனர் மணமக்களுக்கு வாழ்த்துப்பாக்கள் பாடப்பட்டன.

காலை 7 மணிமுதல் பல வீதிகளின் வழியாக திரள் திரளான மக்கள் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் கூட ஆரம்பித்து விட்டனர்.

நகரமண்டபத்தின் வாசலில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும், பாரியாரும் விருந்தினர்களை வரவேற்று உபசரித்தனர்.

திருமணம் முடிந்தபின்

(6-ம் பக்கம் பார்க்க)

பாத்திரங்கள் வாங்கும் பொழுது
டொலர் மார்க் என்றே கேளுங்கள்

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
டாம் வீதி கொழும்பு

உற்பத்தியாளர்கள்:
அலுமினிய தொழிற்சாலை
மாவிட்டபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

முறையான கூட்டுறவையும், உத்வேகமுள்ள பஞ்சாயத்தையும் எனக்குத் தாருங்கள். உறுதியான சமதர்ம ஜனநாயகத்தை நீங்கள் பெறுவீர்கள். —நேரு

ஈழநாடு
EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 385
யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு தை மீ 10 (23-1-66)

## 'ஆம்பூஸ் மன்' அல்லது ''புகார் அதிகாரி''

சமீபத்தில் கொழும்பில் நடைபெற்ற ''சர்வதேச சட்ட ஆட்சி'' மகாநாட்டிலே சில முக்கியமான விஷயங்கள் விவாதத்துக்கு வந்தன. அவற்றிலே 'ஆம்பூஸ் மன்' அல்லது 'புகார் அதிகாரி' நியமனத்தைப் பற்றிய யோசனை, இலங்கை போன்ற நாடுகளில் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கவும் குறைகளை நீக்கவும் பெரிதும் பயன்படுவதாக இருக்கும்.

நிர்வாக அதிகாரிகள் மூலம் சில மக்களுக்கு அநீதிகள் செய்யப்படுவதாக வைத்துக் கொள்வோம். இப்போதுள்ள சட்டப்படி அவர்கள் நியாயம் பெறுவதற்கு வழிவகை கிடையாது. சுப்ரீம் கோர்டுக்குக்கூட இவ்வித விஷயங்களில் விசாரிக்கவும் நீதி வழங்கவும் சட்டம் இடமளிக்கவில்லை. உதாரணமாக சமீபத்தில் கொழும்பிலே நடந்த ஒரு வழக்கு குறிப்பிடத்தக்கது. இந்தியாவிலிருந்து, ஒரு பெண்மணி 'விசா' மீது இலங்கை வந்து, ஒரு இலங்கைப் பிரஜையை மணந்து, தன் புருஷனுடன் வசித்து வந்தார். சர்வதேச மனித உரிமை சாஸனப்படி ஒருவர் தனக்கிஷ்டமான யாரையும் மணம்புரிந்து கொண்டு அவருடன் வசிக்கலாம். ஆனல் இலங்கை வந்த அப்பெண்மணி, 'விசா' முடிந்ததும் இங்கு புருஷனுடன் வாழ முடியாதென்றும், நாட்டைவிட்டு வெளியேற வேண்டியதுதானென்றும் குடியேற்ற இலாகா அதிகாரி உத்தரவிட்டார் அந்த உத்தரவுப்படி அவரைக் கைது செய்து காவலில் வைத்தனர். அப்பெண் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொண்டார். இந்த உத்தரவு மனித உரிமை சாஸனத்துக்கு மாருக இருப்பினும் இதில் தலையிட தங்களுக்கு அதிகாரமில்லை என்று சுப்ரீம் கோர்ட்டார் கூறி அப்பீலை நிராகரித்தனர். பாவம், அந்த இளம் தம்பதிகளுக்கு மனித நீதி மறுக்கப்பட்டும், கோர்ட்டாருக்கும் அவர்களுக்கு உதவி செய்ய அதிகாரமில்லாது போய்விட்டது.

இதே போல, ''குட்டி ஹிட்லர்''களான சில நிர்வாக அதிகாரிகள் மூலம் எவ்வளவோ அநீதிகள் பொதுமக்களுக்கு இழைக்கப்பட்டும், மக்கள் அவற்றுக்குப் பரிகாரம் கிடைக்க முடியாமல் தவிப்பது பகிரங்க ரகசியம். அதிகாரிகள் சட்டப்படி காரியம் செய்வதாகக் கூறலாம். ஆனல் சட்டமும் நீதியும் எப்போதும் ஒன்ருக இருப்பதில்லை மனித உரிமை சாஸனத்துக்கு மாருக எடுக்கப்படும் நிர்வாக நடவடிக்கைகளைப் பற்றி, பொதுமக்கள் தங்கள் குறைகளை எடுத்துக் கூற ஒரு விசேஷ அதிகாரி அவசியம் தேவை என்பதை நார்வே, சுவீடன் முதலிய நாடுகள் உணர்ந்து அங்குள்ள பார்லிமெண்ட் சபைகள் 'ஆம்பூஸ் மன்'' அல்லது 'புகார் அதிகாரி' என்பவரை நியமித்து, இதைப்பற்றி விசாரித்து நீதிவழங்க ஒழுங்கு செய்துள்ளன. காமன்வெல்த்திலே நியூஸிலாந்திலும் இவ்வித அதிகாரி நியமிக்கப்பெற்றுள்ளார். பிரிட்டன், இந்தியா முதலிய நாடுகளிலும் இவ்வித அதிகாரி அல்லது அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டிய அவசியத்தை உணர்ந்து அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகத் தெரிகிறது. மக்களின் அன்ருட வாழ்க்கையை பாதிக்கும்படியான பல சட்டதிட்டங்களும் அமுல் செய்யப்படும் இக்காலத்தில். நிர்வாக அதிகாரிகள் சட்டப்படி நடப்பதாக இருப்பினும், பல அநீதிகள் செய்யப்பட்டுவிடக் கூடும். செய்யப்பட்டும் வருகின்றன. பார்லிமெண்ட் சபையால் நியமிக்கப்படும் விசேஷ 'புகார் அதிகாரி'யிடம் மக்கள் முறையிட்டுக் கொள்ள வாய்ப்பு இருப்பது, சிறப்பாக எளியமக்களுக்கும் சிறுபான்மையோருக்கும் அவசிய தேவையாவதுடன், நிர்வாக ஊழல்களைக் குறைக்கவும் இது உதவுவதாகும்.

கொழும்பில் நடைபெற்ற சர்வதேச சட்ட ஆட்சிமகாநாட்டை இலங்கைப் பிரதமரே ஆரம்பித்துவைத்து அதற்கு ஆசி கூறியுள்ளார். அம்மகாநாடு பல நல்ல தீர்மானங்களைச் செய்துள்ளதால், அரசாங்கமும் சிறப்பாக பிரதமரும் இதைக் கவனித்து முக்கியமானயோசனைகளையும் சிறப்பாக 'புகார் அதிகாரி' நியமனத்தையும் அமுலுக்குக் கொண்டு வரவேண்டிய நடவடிக்கைஎடுக்கவேண்டும். நிர்வாக அதிகாரிகளில் சிலர் அரசாங்கத்தின்மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்படச்செய்ய, மக்களுக்கு சில அநீதிகளை 'சட்டப்படி' செய்யக்கூடும் தங்கள் அதிகாரங்களை துற்பிரயோகமும் செய்யக்கூடும். அதிகாரிகள் செய்யும் இவ்வித அநீதிகளைப்பற்றி கவனிக்க, விசேஷ அதிகாரி இருப்பின், அதிகாரிகளே அதிக கவனமாக இருப்பதுடன், மனித நீதியுடன் காரியங்கள் செய்யலாம். ஆகவே இவ்விஷயத்தில் இலங்கைப் பிரதமர் விசேஷ கவனம் செலுத்தி, கூடிய சீக்கிரத்தில் இங்கும் 'ஆம்பூஸ் மென்' என்ற புகார் அதிகாரியை பார்லிமெண்ட் மூலம் நியமிக்க ஏற்பாடுசெய்வது பலவிதங்களிலும் நன்மை பயப்பதாக இருக்கும்.

## 12,000 பிக்குகள் சுற்றுப்பிரயாணம்

நாவலப்பிட்டி, சனி

நாட்டின் நன்மையைக் கருத்தில்கொண்டும் அரசாங்கத்தின் நல்ல திட்டங்களை நிறைவேற்ற வழிகோலுமுகமாகவும் 12,000 பிக்குகள் இலங்கையின் பல பகுதிகளுக்கும் சுற்றுப்பிரயாணமொன்றை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

# சொற்கலைப்புலவர் சுவாமி ஞானப்பிரகாசர்

[தமிழுக்கு அளப்பரிய சேவை செய்து தமிழினத்துக்கு பெரும் புகழைத் தேடிக் கொடுத்தவர் வண. ஞானப்பிரகாச சுவாமிகளாகும். அன்னரி நினைவு தினத்தையொட்டி இக்கட்டுரை வெளியாகிறது]

1947-ம் ஆண்டு தை மாதம் 22-ந் திகதி புதன்கிழமை சொற்கலைப் புலவர் சுவாமி ஞானப்பிரகாசர் மறைந்தநாள். சுவாமிகள் சமயத்துக்கும், தமிழுக்கும் செய்துவைத்துப்போன அளப்பிலாத் தொண்டுகளின் வழியே நாமும் செல்ல முயற்சிக்கவேண்டியதே இந்நினைவுநாளின் நோக்கமாகும்.

சுவாமி அவர்கள் செய்துள்ள சமயசேவையைவரையறைப் படுத்தல் முடியாத காரியம். அவர் தமிழ்மேற்றிராசனத்திலே சமயம் செழித்தோங்கச் செய்து அதனைப் பரிபாலனஞ் செய்து, ஐயாயிரவருக்கு மேற்பட்டோருக்கு ஞான தீட்சையளித்து, முப்பத்தேழு சமயநிலையங்களை அடியிட்டுவளர்த்து வளம் பெறச் செய்திருக்கின்ருர். இவ்வித சமய சேவையின் விளைவாக கத்தோலிக்க மக்கள் அவரைச் சின்னச் சவேரியார் என்றும், 20-ம் நூற்ருண்டின் சாங்கோபாங்க சுவாமி என்றும் பாராட்டிப் போற்றிவருகின்றனர்.

சுவாமியவர்கள் பலதுறைகளிலும் தமிழைவிருத்தி செய்துள்ளார், தமிழில் அநேக நூல்கள் இயற்றியுள்ளார். ஆராய்ச்சிமூலம் தமிழின் உற்பத்தியை அறிந்து வெளிப்படுத்திய தனிப்பெருமை சுவாமியவர்களுக்கேயுரியது. சொல் அடிகள் மூலம் பாஷைச் சொற்கள் விருத்திபெற்றுப் பிறபாஷைச் சொற்களின் கருத்துகளைப் பெறுகின்றன என்று ஆராய்ச்சிமூலம் நிச்சயித்துக்காட்டியவர்சுவாமிகளே தமிழ்ப்பாஷையின் அஸ்திவாரங்களை (மூலங்களை)க்கண்டுபிடித்து, அதை மறுபாஷைகளோடு ஒப்புநோக்கிமுன்னெருபோதுமே எவருக்கும் தெரியவராத ஒரு உண்மையை— தமிழின் உற்பத்தியை— தமிழின் செறிவை அவர் இனிதே விளக்கிக் காட்டியிருக்கின்ருர்.

தமிழின் இலக்கண, இலக்கியங்களை அவர் மிக ஆழமாகக் கற்றறிந்திருந்தார் அத்துடன் ஆங்கிலம், லத்தீன், கிறீக், பிராஞ்சியம், போர்த்துக்கீசம், ஒல்லாந்தம் முதலிய மேல்நாட்டுப் பாஷைகளையும், சமஸ்கிருதம், பாலி, மலையாளம், தெலுங்கு, கன்னடம், சிங்களம் முதலிய கீழ்நாட்டுப் பாஷைகளையும் நன்கு அறிந்திருந்தார். இந்தப் பல பாஷா அறிவே புதிய ஆராய்ச்சி வழியில் தமிழின் உற்பத்தியை அறிவதற்குப் பெருந்துணையாய் இருந்தது. அவர் பாஷை ஆராய்ச்சியில் மிக்கான ஊக்கத்துடன் அயராதுழைத்துத் தமது ஞாபகத்துக்கு அழியாச் சின்னமாகச் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி இயற்றினுர். இவ்வித அகராதி ஆக்கியமை தமிழுக்குப் புதுமையானதாகும். இது தமிழன்னைக்குச் சூட்டப்பட்டுள்ள பெருமைமிக்க ஓர் தேம்பாவணியாகும்.

சுவாமியவர்களின் சிறந்த

(5-ம் பக்கம் பார்க்க)

# பார்லிமெண்டில் ஒரு நாள்

இரு எம். பி.க்கள் பொலிஸாரால் வெளியேற்றப்பட்டபின் பிரதமர் டட்லி அதிக தடையின்றி, விவாதத்துக்குப் பதில் அளித்துக் கொண்டிருந்தார். தமிழ்ப் பிரதிநிதிகளைத் தடுப்புக்காவலில் வைத்துவிட்டு, முன்னுள் பிரதமர் பண்டாரநாயக்கா. மொழிச்சட்டத்தை நிறைவேற்றியதை அவர் நினைவூட்டினுர். பார்லிமெண்டில் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க அவர்களுக்கு ஜனநாயகஉரிமையை பண்டாரநாயக்கா ஆட்சியினர் அளிக்கவில்லை என்று பிரதமர் கூறிய சமயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ரீமா தம் பக்கத்திலிருந்த ஓர் அங்கத்தவருடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். இதைப் பார்த்த பிரதமர் எதிர்க்கட்சித் தலைவருக்கு அந்த சமாச்சாரம்கூடத் தெரியாதது ஆச்சரியமே என்று ஒரு கிண்டல் செய்தார்.

ஸ்ரீமா இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ''உங்களிடம் நான் பேசவில்லை'' என்று அவர் மறுத்துவிட்டு ''ஏன் நீங்கள் உணர்ச்சிவசப்படுகிறீர்கள்?'' என்று கேட்டார்.

உடன் பிரதமர், ''நான் உணர்ச்சிவசப்படவில்லை. எனக்குப் போதிய வயதாகிவிட்டது. நீங்கள் எதிரிலே இருந்தும் உணர்ச்சிவசப்படும்படி இருக்கவில்லை'' என்று கூறியதும் பலரும் திடுக்கிட்டனர். ஸ்ரீமாவின் முகம் சற்றே சிவந்துவிட்டது. ''ரொம்பக் கெட்டித்தனம்தான்!'' என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு ஸ்ரீமா கூறியதும், பிரதமர் டட்லி ''ஆமாம், நான் ஒரு முட்டாளல்ல'' என்று உடன் சொன்னுர் இந்த வாக்குவாதம் நடந்த சில நிமிடங்

ஐயாறன் எழுதுகிறார்

களில் எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ரீமா எழுந்து வெளிச் சென்ருர். பிரதமர் டட்லி இவ்வளவு கடுமையாகஇருந்திருக்கத் தேவைதானு?

ஃ ஃ ஃ

பிரதமர் மேலும் பேசிக் கொண்டிருந்தார். டாக்டர் என் எம்.மின் மொழிக் கொள்கையைப்பற்றி பிரஸ்தாபித்து, இதுவரை "அவர் இதுபற்றித் தெளிவாகக் கூறவில்லை என்றபோது என். எம். சிரித்துக் கொண்டே ''எனக்கு அரை மணிநேரம் கொடுங்கள். சொல்லிவிடுகிறேன்.'' என்ருர். ''அவர் எல்லா மனிதருக்கும் நல்லமாக இருக்கிறவர்'' என்று பிரதமர்கூறியதும், ''பெண்களுக்கும் கூடத்தான்''என்று அரசாங்கக்கட்சியிலிருந்து ஒரு குரல் மெதுவாக எழுந்தது. இவ்விதம் ஒருவர் கூறுவதாகவும் ஆனல் தாம் அதைச் சொல்லவில்லை என்றும் பிரதமர் சொன்னதும் அவ்வளவு இங்கிதமல்ல. ஆனல் அவர் பேசுகையில் எதிர்க்கட்சியினர் அடிக்கடி குறுக்கிட்டுக் கேள்விகள் கேட்டதால், அவரும் விவாத வேகத்தில் இப்படிக் கூற நேரிட்டதுபோலும்.

குறுக்கீடுகள் அதிகரிக்கவே ஒருசமயம் பிரதமர், ''ஏன் இப்படிப் நான் பதிலளிக்க முடியாமல் தடுக்கிறீர்கள்?'' என்றுகேட்டார். உடன் டாக்டர் என். எம், அப்படியாயின் நான்வெளிச் செல்லுகிறேன்'' என்று சொல்லி எழுந்தார். ''வேண்டாம், வேண்டாம். நீங்கள் இருக்க வேண்டு

(5-ம் பக்கம் பார்க்க)

# மகத்துவம் வாய்ந்த நோன்புப் பெருநாள்

— எம். எச். எம். அப்துற்றஸ்ஸாக் —

(தலைமை ஆசிரியர் யாழ். வண். முஸ்லிம் தமிழ்க்கலவன் பாடசாலை)

[முஸ்லிம்கள் அதிக மகிழ்ச்சி பெறக்கூடிய தினங்கள் வருடத்தில் மூன்று நாட்களே. இரண்டு பெருநாட்களும், லைலதுல் கத்ர் எனும் மாட்சிமை மிக்க இரவுமேயாகும். ஈதுல் பித்ர் பெருநாள்— இறைவன் எம்மீது கடமையாக்கிய நோன்பை அனுஷ்டித்துநிறைவேற்றுதற்க்காக அவனைத் துதிக்கும் தினமாகும்.]

ஈதுல்பித்ர் எனும் நோன்புப் பெருநாள் முஸ்லிம்களின் முதற் பெரும் பெருநாளாகும். இப்புனித நாளை உலகெங்கினுமுள்ள முஸ்லிம்கள் கொண்டாடுகின்றனர்.

மனிதன் மனிதனுக வாழ்வதற்கு ஆண்டவன் சில சட்டதிட்டங்களை அருளியுள்ளான். இறைவனருளிய சட்டதிட்டங்கள் மனிதனுக்கு இன்பமளிக்கக்கூடியனவாயிருக்கின்றன. இவ்வாறு இறைவன் மனிதனுக்கு ஐந்து கடமைகளைத் தந்து அருளினுன். அவற்றுள் நோன்பும் ஒன்று. நோன்பு மாதத்தில் மனிதன் தனது உள உடற் தேவைகளைக் கட்டுப்படுத்திக் கொள்கிறுன். ஆதலால் தான் ''ஸெளம்'' எனும் பெயர் கொண்டு திருமறையில் சுட்டிக்காட்டியுள்ளான். 'ஸெளம்' என்பதற்குக் காத்துக் கொள்ளல் என்பது பொருளாகும்.

விடிவெள்ளி உதிக்கும் வைகறை முதல் சூரியாஸ்தமனம் வரை பசி, தாகம், காமக் குரோதங்கள் முதலியனவற்றிலிருந்து நோன்பாளி தன்னைக் காத்துக் கொள்கிறுன். கண், மூக்கு, செவி, மெய், வாய் ஆகிய ஐம்புலன்களும் ஆசையைத் தூண்டிவிடக்கூடியவை. காட்சி, நுகர்வு, கேள்வி, மெய், உணர்ச்சி, சுவை, நுகர்ச்சி ஆகியவைகளே நெஞ்சகத்தில் கிளர்ச்சியினை உண்டாக்கக் கூடியவை. தீய [உணர்ச்சிகளை அடக்கி ஆள்வதில் மனிதன் நோன்பு மாதம் முழுமையும்] பயிற்சி அடைகிருன்.

### நோன்பின் அனுபவம்

இறைவன் சட்டத்தில் ஆண்டியும் அரசனும் ஏழையும் பணக்காரனும் நோன்பு நோற்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். பணக்காரனுக்கு பசியின்னதென்று அறியும் வாய்ப்பு இருக்கின்றது. பணக்காரனுக்கு ஏழைமீது இரக்கம் ஏற்பட்டு, அவன் தன் செல்வத்திலிருந்து ஏழைகளின் பங்கான சக்காத்து, சதக்கா ஆகியவைகளைக் கணக்கிட்டுக் கொடுக்கவும் இது செய்கின்றது. இஸ்லாத்தில் ஐம்பெரும் கடமைகளில் சக்காத்தும் ஒன்று. தனம் படைத்தவர்கள் இவ்வேழை வரி செலுத்த வேண்டுமென்பது இறைவனின்கட்டளை. இக்கட்டளைக்குப் பணியச் செய்வதற்கும் இந்நோன்பு பயிற்சி அளிக்கின்றது.

நோன்பாளி தன் உணர்ச்சிகளை அடக்குவதனுல் அவ

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்னும் நெருக்கடி : ஜப்பான் சமாதானமுயற்சி தோல்வி

## மத்தியஸ்த யோசனையை ரஷ்யா நிராகரித்தது

### "தகராறைத் தீர்ப்பதில் ஹனேய்க்கு விருப்பமில்லை"

மாஸ்கோ, ஜன. 22

சோவியத் யூனியனின் மத்தியஸ்தத்துடன் வியட்னுமில் அமைதியை ஏற்படுத்த ஜப்பான் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்திருக்கின்றன. ஜப்பானின் மத்தியஸ்த யோசனைக்கு இணங்க ரஷ்யா மறுத்துவிட்டது.

ஜப்பான் வெளிநாட்டு மந்திரி திரு ஷீனு, இங்கு வியட்னும் நெருக்கடி குறித்து பேச்சுக்கள் நடத்தினர். வியட்னும் யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவருவதற்கு சோவியத் யூனியன் தனது செல்வாக்கைப் பிரயோகிக்க வேண்டும் என்று அவர் யோனை விடுத்திருந்தார் ஆனல் இதனை ஏற்றுக்கொள்ள ரஷ்யா மறுத்துவிட்டது

திரு ஷீனு கடந்த இரு நாட்களாக சோவியத்வெளிநாட்டு மந்திரி திரு குரோமிக் கோவுடனும் மற்றும் உயர்தர அதிகாரிகளுடனும் பேச்சுக்கள் நடத்தினர். நேற்று அவர் ரஷ்யப் பிரதர் திரு. கோஸிஜினுடன் பேச்சுக்கள் நடத்தினர். பின்னர் ரஷ்ய ஜனதிபதியையும் சந்தித்தார்

வியட்னுமிலிருந்து அமெரிக்க துருப்புகள் முதலில் வெளியேறவேண்டும் என்பதையே ரஷ்யா மீண்டும் வலியுறுத்திக் கூறியதாகச் சொல்லப்படுகிறது.

**டீன்ரஸ்க் கருத்து**

நேற்று அமெரிக்க மந்திரி திரு. டீன்ரஸ்க் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்; வியட்னும் யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா புமுமுயற்சிகளை மேற்கொண்டபோதிலும் ஹனேயிலிருந்து சாதகமான பதிலோ அல்லது உற்சாகம் அளிக்கக்கூடிய நடவடிக்கைகளோ இல்லை என்று கூறினர்.

வடக்கு வியட்னும் மீது குண்டுவீச்சு நிறுத்தம் நீடிக்குமா என்று கேட்டபொழுது, "அது சொல்ல முடியாது" என்று திரு ரஸ்க் பதிலளித்தார்.

வியட்னும் நெருக்கடியை அவதானித்து வரும் மாஸ்கோ, தனது பொறுப்பையும் உணரவேண்டும் என்று அவர் கூறினர்.

## ரஷ்யாவுக்கு ஜப்பான் அழைப்பு

மாஸ்கோ, ஜன. 22

ஜப்பானுக்கு விஜயம் செய்யுமாறு ரஷ்யப் பிரதமர் கொஸிஜினை ஜப்பான் பிரதமர் அழைத்துள்ளார்.

## தீவிபத்து

சைகோன், ஜன. 22

சைகோனுக்கு அருகே அமெரிக்கக் கட்டிடம் ஒன்று நேற்று தீப்பற்றிக் கொண்டது. இதற்கான காரணம் அறிவிக்கப்படவில்லை.

## இந்தியாவுக்கு கிரேக்க மாவு

ஏதன்ஸ், ஜன. 22

இந்தியாவுக்கு 5000 தொன் மாவு வழங்க கிரேக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்த முடிவு நேற்று கூட்டப்பட்ட அவசர மந்திரிசபைக் கூட்டத்தில் செய்யப்பட்டது.

## அணு சோதனை

வாஷிங்டன், ஜன. 22

அமெரிக்கா நேற்று நிலத்துக்கடியில் அணுஆயுத சோதனை நடத்தியது கடந்த ஒரு வருடத்தில் அமெரிக்கா மூன்று சோதனைகளை நடத்தியிருக்கிறது.

## உளவு பார்த்தாராம்

லண்டன், ஜன. 22

மேற்கு ஜெர்மனியில் உளவு வேலை பார்த்ததாக ஐந்து ரஷ்யர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## ஆலோசனை

ரோம்நகர், ஜன. 22

புதிய அரசாங்கமொன்றை அமைப்பது சம்பந்தமாக இத்தாலிய அதிபர் நேற்று அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்தித்தார்.

## டட்லிக்கு பாராட்டு

பம்பலப்பிட்டி சனி

'தேசிய அரசாங்கத்தின் தலைவர் திரு டட்லி சேனநயகா இந்த நாட்டைப் பிளவுபடுத்த விரும்பவில்லை. இந்தநாட்டைத் தமிழர்களிடம் ஒப்படைக்கவும் அவர் தயாராகவில்லை. இந்த நல்லெண்ணத்துடன் தான் தமிழ்மொழிச் சட்டவிதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.'

இவ்வாறு சமஸ்தலங்கா திரிநிகாயா பிக்கு மகாபால மண்டலயாவின் தலைவர் வண. மலவானு ஞானிசர தேரோ கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆட்சியைக் கைப்பற்ற சிலர் இனத்துவேஷத்தைத் தூண்டிவிடுகிறர்களென்றும் உண்மையான சிங்களவர்கள் மார்க்ஸியவாதிகளின் தவருன திட்டங்களுக்கு ஆளாகிவிட மாட்டார்களென்றும் அவர் மேலும் கூறினர்

## ரஷ்யத் தொழில் நிபுணர்கள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

இலங்கை டயர் தொழிற்சாலை, உருக்கு தொழிற்சாலை ஆகியனவற்றுக்கு தொழில் நுட்ப ஆலோசனை கூறவென 46 ரஷ்ய நிபுணர்கள் இலங்கை வரவிருக்கிறர்கள்.

டயர் கூட்டுஸ்தாபனம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்திலும் உருக்கு கூட்டுஸ்தாபனம் எதிர்வரும் ஜூன் மாதத்திலும் உற்பத்தியை ஆரம்பிக்கவிருக்கின்றன.

## இலவச வகுப்பு

யாழ்ப்பாணம், சனி

வட்டுக்கோட்டை சிவன் இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற்றுவந்த பண்ணிசை சமயபாடம் மற்றும் பாடங்கள், புதிய விடுமுறை திட்டப்படி ஒவ்வொரு போயா தினங்களிலும் இப்போது நடைபெறுகின்றன. இவ்வகுப்பில் ஏராளமான மாணவ மாணவிகள் பங்கு கொண்டு இலவசக் கல்வி பெறுகின்றனர்.

## காஷ்மீர் பிரச்னையை சுமுகமாக தீர்க்குக

### இந்திராவுக்கு கோரிக்கை

ராவல்பிண்டி, ஜன. 22

சுயநிர்ணய அடிப்படையில் காஷ்மீர் பிரச்னையைத் தீர்த்துவைக்குமாறு ஸ்ரீநகரிலுள்ள ஷேக் மொகமட் ஹூசைன், இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைக் கோரியுள்ளார்.

திருமதி இந்திரா காந்திக்கு அவர் அனுப்பிவைத்துள்ள செய்தியில் புதிய பிரதமராக அவர் தெரிவு செய்யப்பட்டிருப்பதை வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

திரு. ஷேக் மொகமட் ஹூசைன் இங்குள்ள மதஸ்தாபனமொன்றின் தலைவராகும். காஷ்மீர் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமைகள் வழங்கப் படவேண்டுமென்றும் காஷ்மீர் பிரச்னை தீர்க்கப்பட்டு இருநாடுகளும் சுமுகமாக வாழ வழிசெய்யுமாறும் அவர் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

## மொராக்கோ மந்திரி மீது சர்வதேச வாரண்ட்

பாரிஸ், ஜன. 22

மொராக்கோ எதிர்க்கட்சித் தலைவர் திரு. பென் பார்காவைக் கடத்தியதாகச் சொல்லப்படும் மொராக்கோ மந்திரி ஜெனரல் மொகமட் ஒவ்கெர் மீது பிரெஞ்சு நீதிபதி ஒருவர் சர்வதேச வாரண்ட் பிறப்பித்துள்ளார். மந்திரியைக் கைதுசெய்ய இந்த வாரண்ட் உதவிசெய்யும்.

பென்பார்காவைக் கடத்தியது சம்பந்தமான விசாரணைகளை நடத்திய நீதிபதி லூயிஸ் ஸொலிங்கர், மொராக்கோ பொலிஸ் அதிகாரி மேஜர் மொகமட் டிமிலி திரு. மிலெவுட் டௌகி ஆகியோர் மீது கைது செய்வதற்கான வாரண்டுகளைப் பிறப்பித்திருக்கின்றர்.

பென் பார்கா கடத்தப்பட்ட மறுதினம் இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் பாரிஸில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

மொராக்கோ மந்திரியைக் கைதுசெய்ய மொராக்கோ அதிகாரிகள் தவறுவார்களேயானல் அவர் வேறெந்த நாட்டில் இருந்தாலும் கைதுசெய்யப் புதிய வாரண்ட் வகைசெய்கிறதென்று பிரெஞ்சு நீதிபதி வட்டாரங்கள் தெரிவித்தன. (பி டி. ஸி.)

## இரான்ஸி தலைமையில் புதிய சமஷ்டி அரசாங்கம்

### நைஜீரியாவில் நிறுவப்பட்டது

லேகோஸ், ஜன. 22

நைஜீரியாவில் ஏற்பட்ட திடீர்ப் புரட்சியைத் தொடர்ந்து இராணுவ ஆட்சி நிறுவிய ஜெனரல் இரான்ஸி, நேற்று புதிய சமஷ்டி அரசாங்கம் ஒன்றை அமைத்துள்ளார். இந்த அரசாங்கத்தின் அதிபராக ஜெனரல் இரான்ஸி இருப்பார்.

இந்த அறிவித்தலை ஜெனரல் இரான்ஸி நேற்று விடுத்தார் புதிய சமஷ்டி அரசாங்கத்தில் சிவிலியன்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. இராணுவ உயர் அதிகாரிகளே சகல பதவிகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ உயர்சபை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியாவின் நான்கு மாகாணங்களுக்கும் இராணுவ ஜெனரல்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களே இங்கு கவர்னர்களாகக் கடமையாற்றுவார்கள்.

## விமானவிபத்து: அபாயமில்லை

மாட்றிட், ஜன. 22

ஸ்பெயினில்கடந்ததிங்கட்கிழமை விபத்துக்குள்ளான அமெரிக்க குண்டுவீச்சு விமானத்தைத் தேடுவதில் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த விமானத்தை அமெரிக்கா ஸ்பெயின் அதிகாரிகள்தேடி வருகின்றனர் இந்த விமானத்தில் அபாயமில்லாத அணு ஆயுதங்களும் குண்டுகளும் இருந்தன. விமான விபத்தில் பொதுமக்களின் சுகாதாரத்துக்கு ஆபத்து எதுவும் வரா என்று அமெரிக்க அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இந்த விமான விபத்தில் மூன்று விமானிகள் உயிரிழந்தனர். நால்வரைக் காணவில்லை. (பி. டி. ஸி.)

## தடை உத்தரவு

மாட்றிட், ஜன. 22

நேட்டோ நாடுகளின் இராணுவ விமானங்கள் தனது வானப் பிராந்தியத்தில் பறந்து செல்வதற்கு ஸ்பெயின் தடைவிதித்துள்ளது.

புதிய நடவடிக்கையினுல் பிரிட்டன் பாதிக்கப்படாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சதி

தெஹ்ரான், ஜன. 22

ஈரானிய அரசாங்கத்தைக் கவிழ்க்க சதி செய்ததாக 55 பேர் கைதுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் வெளிநாடொன்றின் உதவியுடன் ஆயுதப்புரட்சி நடத்த திட்டமிட்டிருந்ததா அரசாங்கம் அறிவித்துள்ளது ஆனல் வெளிநாட்டின் பெயர் வெளியிடப்படவில்லை. (பி. டி ஸி.)

## லஞ்சத்தை ஒழிக்க ஈ. வெ. ரா. யோசனை

சென்னை, ஜன. 22

லஞ்சத்தை ஒழிக்க திராவிடக கழகத்தலைவர் திரு. ஈ வே. ராமசமி புதுயோசனை யொன்றை வெளியிட்டிருக்கிறர். அது வருமாறு:

ரூ 250 க்குக் குறையாமல் ரூ 500 வரை சம்பளகிரேடு நிர்ணயம் செய்து 100 இரகசிய பொலிஸாரை நியமிக்க வேண்டும் ரூ 1000 முதல் ரூ 1500 வரை கிரேடில் இவர்களுக்கு 2 மேலதிகாரிகளை நியமிக்கலாம்

மந்திரிகளுக்கும் இவர்களுக்கும் தொடர்பில்லாத வகையில் டில்லியில் நேர்மையான மந்திரி தலைமையில் இந்த இலாகா செயல்பட வேண்டும்.

இந்தஇலாகாவிற்கென்றே தனிப் பத்திரிகை நடத்தி பிடிக்கும்வழக்குகளை பெயர் விவரத்துடன் பிரசுரிக்க வேண்டும்.

லஞ்ச வழக்குகளை விசாரிக்க தனி கோர்ட் ஏற்படுத்தி சிறைதண்டனை குறைவாகவும் அபராதம் அதிகமாகவும் விதித்து தண்டிக்க வேண்டும்

தண்டிக்கப்படும் நபர்களது குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள், பின்சந்ததிகள் அரசாங்கத்தில் எந்தவிதமான வேலைக்கும் வரமுடியாதவாறு தடுத்து தள்ளிவைக்கப்பட்ட குடும்பம் என விளம்பரம் செய்ய வேண்டும்.

## நாஸர் வாழ்த்து

கெய்ரோ, ஜன. 22

ஐக்கிய அரபுக்குடியரசு அதிபர் நாஸர், இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா ... வாழ்த்துச் செய்தி யனுப்பியுள்ளார்.

## சாஸ்திரி மறைவு: லண்டனில் அஞ்சலி

லண்டன், ஜன 22

லண்டனில் நேற்று மாலை நடைபெற்ற சாஸ்திரி அஞ்சலிக் கூட்டத்தில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸன், மவுண்ட் பேட்டன் பிரபு, பிரிட்டிஷ் மந்திரிகள், எதிர்க்கட்சியினர் உட்பட பெருந் திரளானேர் கலந்து கொண்டனர்.

எலிஸபெத் மகாராணி சார்பில் பிரதிநிதியொருவரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

பிரதமர் வில்ஸன் அப்பொழுது பேசுகையில். சாஸ்திரியின் மறைவு பேரிழப்பு என்றும் உலகம் தனது ஒரு மகனை இழந்து விட்டது என்றும் கூறினர்.

## இந்திரா

புதுடில்லி, ஜன. 22

திருமதி இந்திரா காந்தி திங்கட்கிழமை புதிய பிரதமராக விசுவாசப் பிரமாணம் செய்து கொள்வார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கொலை வழக்கு விசாரணை 30-ம் திகதிக்கு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், சனி

உடுவில் மல்வத்தைச் சேர்ந்த தவசி கந்தையா என்பவர் அதே ஊரைச் சேர்ந்த வல்லியன் ஐயன் என்பவரை கடந்த டிசம்பர் மாதம் இரண்டாம் திகதி கிறிஸ் கத்தியால் குத்திக் கொலைசெய்ததாக சுன்னுகம் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எப். எச். அத்துறுபாலு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம் சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம் சாட்சிய மளிக்கையில் கூறியதாவது: நான் காலம்சென்றவரின் உடலில் சென்ற டிசம்பர் மாதம் 20-ம் திகதி பிரேத பரிசோதனை செய்தேன். அவரின் நெஞ்சில் ஒரு கிறிஸ்கத்திக்குத்துக் காயம் காணப்பட்டது. அக்காயம் இருதயத்தையும் சுவாசப்பையையும் தாக்கியிருந்தது. இதைவிட அவரின் குடலில் ஒரு துவாரம் இருந்தது. அத்துவாரத்திற்கும் நெஞ்சில் உள்ள கிறிஸ் கத்திக்குத்துக் காயத்துக்கும் தொடர்பில்லை. நெஞ்சில் உள்ள கத்திக்குத்துக் காயத்திலுலும், குடலில் உள்ள துவாரத்திலுலும் இரத்தம் நச்சுத்தன்மையடைந்தமையால் காலம் சென்றவரின் மரணம் சம்பவித்தது.

நீதிபதிமேல்விசாரணையை இம் மாதம் 30 திகதிக்கு ஒத்திவைத்தார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆர்.ஜே செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் வழக்கை நடத்தினுர். காங்கேசன்துறை பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தியின் உதவியுடனும் வழக்கறிஞர் திரு. எஸ். ஸ்ரீதரனின அனுசரணையுடனும் திரு. ஆர். கண்ணுத்துரைவழக்கை நடத்தினுர்.

## விவசாய பயிற்சி பெற்றோர் சங்கம்

வவுனியா, சனி

''உலகில் எப்பாகத்திலும் விவசாயத்தைப் போற்றி வளர்க்கிருர்கள், அதேபோல் இலங்கையும் விதிவிலக்கல்லாமல் விவசாயப் பயிற்சி பெற்றவர்களுக்கு தேசிய அரசாங்கம் வேலைவாய்ப்பு அளிக்குமென்பதில் எள்ளளவும் ஐயமில்லை'' என்று வவனியாவில் நடைபெற்ற விவசாயப் பயிற்சி பெற்றோர்சங்க அங்குரார்ப் பணக்கூட்டத்தில் தலைவர் திரு. ச. நாகராசா பேசுகையில் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இத்துறையில் பயிற்சிபெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பளித்தால் இலங்கையை மேலும் வளமாக்கமுடியும் என்றுகூறினுர்.

நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: உபதலைவர்: ஜோ. செல்வராசா, காரியதரிசி; நா கண்ணையா, உபகாரியதரிசி: ஆ. கிருஷ்ணபிள்ளை, தனுதிகாரி: த. குலேந்திரன். மேலும் 5 பேர் கொண்ட செயற்குழு தெரிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் பிரேரித்தவாறு வவனியா எம். பி. திரு. த. சிவசிதம்பரம்மூலம் வேலைபற்றிருக்கும் விவசாய பயிற்சி பெற்றவர்களை விவசாய ஆசிரியர்களாக நியமிக்கவேண்டுமெனக் கோரும் ஒரு மசோதாவைச் சமர்ப்பித்துள்ளனர்.

## புதிய நிர்வாகசபை

யாழ்ப்பாணம், சனி

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவுக்கான புதிய நிர்வாக சபை நிலைய மண்டபத்தில் தெரிவுசெய்யப்பட்டது. இவ்வர்ண்டுக்கான இச்சபைககு திரு. ஐ. எஸ். சண்முகநாதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக திரு. குலசேகரமும் உபசெயலாளராக திரு. ரி. சுந்தரலிங்கமும், தனுதிகாரியாக சி. பத்மநாதனும், உபதனுதிகாரியாக எஸ். எஸ். திராகராசாவும் தெரிவு செய்யப்பட்டனர். விளையாட்டுக்காரியதரிசியாக ஐ. திருலோகேஸ்வரனும், கலைக்காரியதரிசியாக என். எஸ். லோகேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபை அங்கத்தவர்களாக ஈ. கே. குமரையா, எஸ். சதாசிவம், எஸ். சவுந்தரராஜன், ஆலாலசுந்தரம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## கடித உறை தட்டுப்பாடு

சுழிபுரம், சனி

தபால்முத்திரைகள் கடித உறைகள் தட்டுப்பாடுகடந்த சிலமாதங்களாக இருந்துவருவதை பொதுமக்கள் நன்கு சுட்டிக் காட்டியும் வேண்டியவற்றை வழங்குவதில் தாமதம் செய்து வருகின்றனர். 11 சதம் பெறுமதியான கடித உறைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனுல் பொதுமக்கள் மிகவும் கஷ்டப்படுகின்ருர்கள். சகல தபாற்கந்தோர்களிலும் கடிதஉறை பெற்றுக்கொள்ள முடியாமலுள்ளது.

## வருடாந்த விழா

சுழிபுரம், சனி

வடபிரதேச இலங்கை முற்போக்கு மாதர் சம்மேளனத்தின் வருடாந்த மகாநாடு பெப்ரவரி மாதம் 27-ந் திகதி யாழ்ப்பாண நகரமண்டபத்தில் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அன்றைய தினம் கலை, கைப் பணி பொருட்காட்சி ஒன்றும் நடாத்தப்படவிருக்கின்றன. விழா சம்பந்தமான சகல ஏற்பாடுகளையும் திருமதி த. க. ஞானியார் கவனித்து வருகின்ருர்.

## கிறிஸ்தவ ஐக்கிய வாரம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இம்மாதம் 18-ந் திகதியிலிருந்து 25-ம் திகதிவரை கொண்டாடப்படும் கிறிஸ்தவ ஐக்கியவாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் வேம்படி 'ரிறிமமர்' மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறவிருக்கிறது. வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும் இம்மகாநாட்டில் வண. பிதா டி. ஏ. ஜே. மதுரநாயகம், வண. டி. ஜே. அம்பலவாணர் ஆகியோர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்துகொள்ளவிருக்கிருர்கள்.


"லைடன்" LEYDEN

தயாரிப்புகள்:-

- பெனியன்
- ஸ்போட் சேட்
- ரி சேட்
- ரெறி சேட்
- ரெறி பிளவுஸ்
- வேபி வெஸ்ட்
- கால்சேஸ் (Nylon & Cotton)

லைடன் காமென்ஸ்

32A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.



பெட்டா பார்மஸி

உங்களுக்கு வேண்டிய

மருந்துகள், ரசாயனப் பொருள்கள், மருந்து தயாரிப்பதற்கான பொருள்கள் ரண சிகிச்சைக் கருவிகள் காயங்களைக் கட்டுவதற்கான துணிகள் யாவற்றுக்கும் எம்மிடம் வரவும்

வி. பி. பி. ஓடர்கள் ஏற்கப்படும்

KMJ

23, டாம் வீதி கொழும்பு-12 போன்



உழைத்துக் களைத்த அப்பாவுக்கு மாமைட்

மாமைட்



அதிகாலையிலே வேலைக்குச் சென்று



குடும்பத்தின் மேன்மைக்காக ஓய்வின்றி உழைத்து



அந்திப் பொழுதில் அசதியால் வீட்டிற்குத் திரும்புகையில்



அலுப்பைப் போக்கி, வன்மை பெற்றிட அப்பா அருந்துவது மாமைட்

சக்தி மிகுந்த சுகவாழ்வுக்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் கொண்ட ஒரு சிறந்த உணவு மாமைட். வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சப் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம்.






மாவுப் பொருள் சர்க்கரைப் பொருள் அற்ற, B விட்டமின் நிறைந்த, தூய்மையான, ... உணவுப் பொருள்.

632/66


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### கேள்வி விளம்பரம்

ஒட்டிசுட்டான் கற்சிலை மடுவைச் சேர்ந்த பேராறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து முள்ளியவளை அரசாங்க நெல் பண்டகசாலைக்கு நெல் ஏற்றிச் செல்வதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. மூன்று புசல் கொண்ட ஒவ்வொரு மூடைக்கும் ஏற்றுமதிச் செலவு பற்றிய விபரமும், வெற்றுச்சாக்குகளை திரும்பக் கொண்டுவந்து சேர்ப்பதற்கான விபரமும் தெரிவிக்கப்படவேண்டும். மேலும் விபரங்களுக்கு மேற்படி கூட்டுறவுச் சங்க மனேஜருடனோ அல்லது எஸ் துரைராஜா, 8/6, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திலோ தொடர்புகொள்ளவும்.

1560

### நெல் அளப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

நெடுங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நெல்மூடைகள் வாகனங்களிலிருந்து இறக்கிக் கொட்டி அளந்து சாக்குகளில் போட்டு 3 புசல் கொண்ட மூடைகளாக்கி சேமிக்குமிடத்தில் வரிசைக் கிரமமாக அட்டி அட்டியாக அடுக்கித் தருவதற்கு மூடை ஒன்றுக்கு அல்லது புசல் ஒன்றுக்குரிய விகிதம்கோரி விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபால்மூலம் அனுப்பப்படவேண்டும். 31-1-66 வரை ஏற்றுக்கொள்ளப்படும். தெரிவுசெய்யப்படும் விண்ணப்பகாரன் ரூபா 100/- பிணைப்பணமாகச் செலுத்தவும், சங்கம் தேவையெனக் கருதும் காலத்தில் போதிய ஆட்களை வைத்து தாமதமில்லாது வேலைசெய்து கொடுக்கக்கூடியவராயுமிருத்தல் வேண்டும்.

கௌரவ காரியதரிசி,
பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
1558 நெடுங்கேணி.

### பண்டகசாலைக்கு மனேச்சர் தேவை

நெடுங்கேணி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பண்டகசாலை மனேச்சருக்கு விண்ணப்பங்கள் 31-1-66 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பகாரர் தகுதி:- வயது 25-க்கு மேற்பட்டவர்; பொதுக்கல்வித் தராதரப் பரீட்சையில் சித்தியெய்தியும் கூட்டுறவுக் கல்லூரியில் பயிற்சிபெற்றவராயும் இருத்தல்வேண்டும்.

விண்ணப்பகாரர் பிணையாக ரொக்கப்பணம் ரூபா 1000/-, ஆதனப்பிணை ரூபா 2000/- கொடுக்கக்கூடியவராகவிருத்தல்வேண்டும்.

மாதச்சம்பளம் ரூபா 125/- கொடுக்கப்படும் விண்ணப்பங்கள் பதிவுக்கடிதமூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

கௌரவ காரியதரிசி,
பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்,
1557 நெடுங்கேணி

### நியமனம்

சுழிபுரம், சனி

இலங்கை க்ஷயரோகத் தேசிய நிவாரண சங்கத்தினர் யாழ்ப்பாணம்-வலிகாமம் மேற்குப்பிரிவுக்கு க்ஷயரோகத் தடுப்பு அமைப்பாளராக திரு டபிள்யு. என். தேவகடாச்சத்தை நியமித்துள்ளனர்.

### பார்லிமெண்டில்...

(2-ம்பக்கத்தொடர்ச்சி)

கிறேன். நீங்கள் இருப்பது எனக்கு மிக உற்சாகமளிக்கிறது'' என்றதும் என். எம். சிரித்துக் கொண்டே ஆசனத்தில் அமர்ந்தார்.

பிரதமர் டட்லி சுமார் ஒரு மணிநேரம்தான் பேசினார். அவருக்கு அதிக நேரமில்லை. அவர் பேசுகையில் எதிர்க்கட்சியிலே தோம்பே பிரதிநிதி பீலிக்ஸ் டயஸைக் காணவில்லை. எம். ஜி. ஆர்., சரோஜாதேவி விஜயம், 'திராவிட முன்னேற்றம் கலகம்' இப்பல்லவியைப் பாடி எச்சரித்ததுடன், மொழிப் பிரச்னையைத் தீர்க்க வட்டமேசை மகாநாடு கூட்ட வேண்டுமென்றும் தோம்பேயார் கூறியிருந்தார். அவர் இல்லாததாலோ என்னவோ, பிரதமர் இதுபற்றி ஒருபதிலும் கூறவில்லை. அவர் சுருக்கமாகவே பேசினுரென்றாலும் அவர் பேச்சு ஆணித்தரமாக இருந்தது. அவர் சொன்ன சொல் ஒவ்வொன்றும் உள்ளத்திலிருந்து வந்தது. சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து நாட்டில் தேசிய ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டிய அவசியத்தை அவர் வற்புறுத்தியதுடன், இதில் தமது பதவிபோனாலும் அதைப்பற்றித் தாம் கவலைப்படப் போவதில்லையென்றும் இப்பதவியிலிருந்து தாம் பன்முறை மாறிருப்பதாகவும் சொன்னார். அவர் பேச்சிலே உண்மையும் உறுதியும் பொலிந்தன.

மற்றும் சிலர் பேச விரும்புவதால் தாம் இத்துடன் முடிப்பதாகக் கூறி 4-15 மணிக்கு அமர்ந்தார், உடன் யாழ்ப்பாணப் பிரதிநிதி ஜி ஜி. உள்ளிட்டு மூவர் பேச எழுந்தனர். கால் மணிநேரம்தான் இருந்தது. விவாதத்தை முடிக்க வேண்டுமென்ற பிரேரணை கொண்டுவரப்பட்டு நிறைவேறியதால், ஜி. ஜி. உள்ளிட்டு யாருக்கும் பேச சான்ஸ் இல்லை. சுதந்திரக் கட்சியினர், தமிழரசாருக்கு அளிக்க முன்வந்த 'சலுகை' களைவிடத் தாம் அளிக்கும் 'சலுகை' மிகக் குறைவென்றும் 'மாவட்ட சபைகள்' தலைமை அரசாங்கத்தின் அதிகாரத்துக்குட்பட்டே இருக்கும் என்றும் பிரதமர் அழுத்தமாகக் கூறியபோது ஜி. ஜி கரகோஷத்தால்வரவேற்றார். அவர் என்ன பேசப் போகிறாரென்பதைக் கேட்க ஆவலுடன் இருந்தேன். ஆனால் அவருக்கு ஒரு 'சான்ஸ்' கிடைக்க முடியாமல் போனது ஏமாற்றமாக இருந்தது. அவர்பேச முடியாமல் போனதும் ஒரு விதத்தில் நல்லதுதான் என்கிறார் ஓர் அன்பர்.

அன்று விவாத இறுதியிலே திடீரென சில ஆச்சரிய சம்பவங்கள் ஏற்படலாமென்று இருதரப்பினரும் கூறியிருந்தனர். அரசாங்கக் கட்சியிலிருந்து 20 பேர் வெளியேறலாமென்றும் சொல்லப்பட்டது. ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. கருத்துவேற்றுமைக்கான இவ்விஷயத்தில் தேசிய அரசாங்கத்துக்குக் கிடைத்த வெற்றி, அதன் பலத்தையும் கட்டுப்பாட்டையும் உறுதிப்படுத்தியதுடன், இலங்கையில் ஜனநாயகம் வெற்றிகரமாக நடைபெறுமென்ற நம்பிக்கையையுமேற்படுத்தியது.

அரசாங்கசபை, பார்லிமெண்ட் முதலிய எவ்வளவோ கூட்டங்களைப்பார்த்திருக்கிறேன். ஆனால் அன்று கண்ட காட்சிகளையும், நடவடிக்கைகளையும் என்னால் என்றுமே மறக்க முடியாது.

### புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், சனி

இளவாலை சித்திரமேழி சன சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் நடப்பு வருட உத்தியோகஸ்தர் தெரிவு நடைபெற்றது. தலைவர்: வ. நாகலிங்கம், காரியதரிசி: கா. திருநாவுக்கரசு. நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

### சொற்கலைப்புலவர்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சரித்திர ஆராய்ச்சி வல்லுநராகவும் விளங்கினார் என்பதற்கு அவர் எழுதிய சரித்திர நூல்கள் சான்றுபகரும். சமயவிருத்திக்குதவியாக அவர் இயற்றிக்குவித்து வைத்த பிரசுரங்களும் பலவாகும். சமய சரித்திர ஆராய்ச்சி வல்லுநராக, நூலாசிரியராக மாத்திரமல்ல, ஆனால் தலைசிறந்த பேச்சாளராகவும் அவர் இலங்கினார்.

42 வருடங்களிலும் ஆற்றியுள்ள சமயசேவை, கலைத்தொண்டு, தமிழ்விருத்தி ஆதியவைகளை நம்சமய மக்களும், தமிழுலகமும், அறிஞர் சமூகமும் என்றும் மறவாதிருக்குமென்று துணிந்து கூறலாம்.

(உதவி: பாதுகாவலன்)

### மகத்துவம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

னிடம் சகிப்புத்தன்மை இலகுவாக அமைகின்றது. தன்னோடு சண்டைக்கு வருவோரிடம் ஒரு நோன்பாளி ''நான் நோன்பு வைத்திருக்கின்றேன்'' என்று சொல்லிவிட வேண்டுமெனவும் ''ஒரு நோன்பாளியின் நித்திரை வணக்கமாகவும், மூச்சு இறைவனைத் துதிசெய்வதாகவும் அமைந்திருக்கின்றன'' என்றும் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

#### ''பித்ரா'' தத்துவம்

நோன்பு மாதம் முழுமையும் இறைவன் கட்டளையை ஏற்று அவன் பாதையில் தன் நேரத்தைச் செலவு செய்து வெற்றி கொண்ட தினமே இந்த நோன்புப் பெருநாள். இப்பெருநாள் தினத்தில் பணக்காரர் ஏழைகளுக்கு 'பித்ரா' இடுதல் கடமையாகும். பித்ராவுக்கு உரியவர்கள் சட்டத்தில் இடம்பெற்றிருக்கிறார்கள். பித்ரா பெருநாள் தொழுகைக்கு முன் வழங்கப்பட வேண்டுமென்பது சட்டம். அன்றைய மத்திய போசனத்தை ஒருவேளை உணவுக்கு வழியற்ற ஏழையும் உண்டு வயிறார வேண்டுமென்பதே இச்சட்டத்தின் நோக்கமாகும்.

'ஈதுல்பித்ர்' பெருநாளாம் இப்புனித நாளில் முஸ்லிம்களாகிய நாம் எமக்கிடையே ஐக்கியம், கட்டுப்பாடு, கண்ணியம், சகிப்புத்தன்மை, முதலான நற்பண்புகளை வளர்த்து எதிர்காலத்தை எமக்குரிய நல்ல காலமாக்க இலட்சிய உறுதிபூண வேண்டும். மனத்துக்கண் மாசிலனாதல் வேண்டும். அதுவே அனைத்தறன்.

முஸ்லிம்கள் சுதந்திரத்துடனும் தன்மானத்துடனும் வாழ்வதற்கு இறைவன் இப்புனிததினத்தில் அருள் வழங்கவும், எம்முடையே ஒற்றுமையும், சௌஜன்ய சூழ்நிலையும் நிலவவும் நாம் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

''ஈத் முபாரக்.''

சாந்தியையும் சமாதானத்தையும் தமக்களை இறைவனை இறைஞ்சுவோமாக.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அன்பளிப்புப் பொருட்கள், ''டொய்லட் செட்'', எவர்சில்வர் பாத்திரங்களுக்கு எம்மிடம் விஜயஞ்செய்யுங்கள். எஸ். சவிரிமுத்து, 73, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 1786

கந்த புராண ஏடு, மரத்தினால் செய்யப்பட்ட கொத்துத திருவாசி (சாத்துப்படிக்கு ஏற்றது), பனைமரங்கள் விற்பனைக்கு இருக்கிறது. விளம்பர இல. 1782, 'ஈழநாடு' மேற்பார்த்து என எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 1782

சீமேந்துத் தொழிற்சாலைக்கு வடக்குப் பக்கமாகவும், விறகுகாலைக் கருகாமையில் பிரதான தெருவிற்குச் சமீபமாகவும், ஒழுங்கை முகப்புடன் கூடிய 13 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கிருக்கிறது. இதில்முகப்பில் உள்ள 4 பரப்பு பிரித்துங் கொடுக்கலாம். விபரங்களுக்கு: மு. அ. சின்னத்தம்பி. வியாபாரியார், காங்கேசன்துறை. 1792

எல்லாவித நோய்களுக்கும் பாதுகாப்பளிக்கப்பட்ட 1 1/2 மாதமாக முட்டையிடுகின்ற ஏழு மாத RIR. பேடுகள். துரைரத்தினம், பழைய கோட்டை, கோப்பாய். 1795

அண்டர்வூட் கோல்டன் டச் (Underwood Golden Touch 12") தட்டச்சு இயந்திர ரூலர் விற்பனைக்கு உண்டு. பாலச்சந்திரன், 23, சுவாமியார் வீதி, யாழ்ப்பாணம். 1796

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### தேவை

கட்டிட மின்சார உபகரணங்கள் பற்றிய அனுபவமுள்ள கடை மனேஜர் தேவை. நற்சாட்சிப்பத்திரத்துடன் 29-1-66-க்குமுன் விண்ணப்பிக்கவும். கூட்டுறவுப் பாடசாலைத் தராதரப் பத்திரம் இணைத்தல் நன்று. பிணைப்பணம் அத்தியாவசியம். விபரங்களுக்கு விளம்பர இல. 1797, 'ஈழநாடு' மே/பா. என எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 1797

பிள்ளைகளைப் பராமரிக்கக் கூடிய 30 வயதிற்கு மேற்பட்ட நேர்மையான ஆண் அல்லது பெண் தேவை. சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம். எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். எஞ்ஜினியர், 289, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1794

Vacancies for Clerks and Stenographers available in a corporation. Qualification: S. S. C. or G. C. E. (English). For other particulars and application forms, apply with Rs. 2/- Postal Order. Trust Duplicator, Maviddapuram, Tellippalai.

### கல்வி

ஜி. சி. ஈ. சாதாரணம்/ உயர்தரம், ஜி. ஏ. கியூ., பி ஏ. பரீட்சைகளுக்கு இலங்கையிலேயே மிகத்திறமையான முறையில் அஞ்சல் மூலம் கல்வி அளிக்கப்படுகிறது. 22 இலவசக் கல்வி சலுகைகளும்வழங்கப்படும். யுனைட்டெட் இன்ஸ்ரிற்ரியூட்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 1777

விசேஷ கழிவு. மீட்டல் பாடம் ஜி. சி. ஈ. உயர்தரம் ரூபா 10/-. சாதாரணம் ரூபா 5/-. பரீட்சை வழிகாட்டி உயர்தரம் ரூபா 5/- சாதாரணம் ரூபா 2/50. கட்டுரைகள் ரூபா 3/- கடிதங்கள் ரூபா 1/50. சித்திர, கைப்பணி, கைத்தொழில் பொருட்காட்சியும் விற்பனை நிலையமும். விபரங்கட்கு உடன் தொடர்புகொள்ளவும். யுனைட்டெட்இன்ஸ்ரிற்ரியூட்ஸ், நெல்லியடி, கரவெட்டி /107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1778

உங்கள் இல்லங்களிலுள்ள
கதவு - யன்னல்
மற்றும்
தளபாடங்களைச் சிறந்த முறையில்
பொலிசிங் செய்து கொள்வதற்கு
எம்மிடம் ஒப்பந்தம் செய்து கொள்ளுங்கள்.
பாஷன் பேணிஷிங் பெலஸ்
(தளபாட மாளிகை)
5-7, ஸ்ரான்லி வீதி, - - யாழ்ப்பாணம்.

உத்தரவாதத்துடன்
பழைய டயர்களைப் புதுப்பிப்பதற்கும்
திறமான றப்பர் பொருட்களை தொகையாக
பெறுவதற்கும்
மிகச்சிறந்த இடம்.
ஜெனரல் இண்டஸ்ரீஸ் லிமிட்.,
அத்தியடி, யாழ்ப்பாணம்
காட்சி அறை:
20, ஸ்ரான்லி வீதி போன்: 7024
உங்கள் தேவை! எங்கள் சேவை!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகர் வலம்வந்த கொள்ளைக் கோஷ்டி கைது!

யாழ்ப்பாணம், ஞாயிறு
அண்மையில் யாழ்ப்பணத்தில் 'புயல்' வேகத்தில் நடைபெற்று வந்த திருட்டுகள் சம்பந்தமாக, பல தடவைகள் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளான ஐ. ஆர். வி. கோஷ்டியொன்றை யாழ்ப்பாணம் பொலிஸ் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் திரு. எம். ஆர். சவுந்தரநாயகம் கைது செய்துள்ளார்.

கோஷ்டியாக இயங்கிவந்திருப்பதாகக் கூறப்படும் இவர்கள்; யாழ்ப்பாணம் நகரிலும் சுற்றுப்புறத்திலும் வீடுகள் உடைத்துத் திருடுவதிலும் பஸ் நிலையம் மற்றும் பொது இடங்களில் கண் இமைக்கும் நேரத்துக்குள் களவாடுவதிலும் தீவிர 'கவனம்' செலுத்தி வந்தவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்ரனி அகஸ்டீன், துரைசாமி, மார்ட்டின், கருணதாசா, தனபாலன், சண்முகம் ஆகிய ஆறு பேரும் நேற்று இன்ஸ்பெக்டர் சவுந்தரநாயகத்திஞல் கைது செய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். பல சைக்கிள்களும் மற்றும் பொருள்களும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கல்லூரியொன்றைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் நேற்று மாலை தமது சைக்கிள் களவு போய்விட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பட்டிருந்தார். சுமார் ஐந்து மணிநேரத்துக்குள் இந்த சைக்கிள் கண்டுபிடிக்கப்பட்டு கருணதாசா என்ற நபரை இன்ஸ்பெக்டர் சவுந்தரநாயகம் கைது செய்தார்.

## சோவியத் கலாச்சார தூதுக்குழு

### இம்மாத இறுதியில் யாழ்ப்பாணம் வரும்

குரும்பசிட்டி, சனி
கலாச்சார இலாகா கலைக்கழகம் ஆகியவற்றின் விருந்தினர்களாக இலங்கைக்கு விஜயம் செய்யும் சோவியத் கலாச்சார தூதுக் குழுவினர் ஜனவரி மாதம் 29-ம் திகதி யாழ். நகர் வரவிருக்கின்றனர். இத்தூதுக் குழுவில் அங்கம்வகிக்கும் சேர்ச்கஸ் கோஷ்டி அன்றைய தினம் யாழ் திறந்த வெளியரங்கில் தமது சாகசங்களைகாண்பிக்கும். இதற்கான ஏற்பாடுகளை யாழ். பிரதேச கலாமன்றச் செயலாளரும் காரியாதிகாரியுமான திரு. கே. சிவஞானம் கவனித்து வருகின்ருர். இங்குள்ள ஸ்தல இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கக் கிளையினர் மேற்படி கலாச்சாரக் குழுவுக்கு வரவேற்பு உபசாரம் அளித்துக்கௌரவிப்பர் எனவும் தெரிகிறது.

## இன்று சம்பளம்

கொழும்பு, சனி
ரம்ஸான் பெருநாளை முன்னிட்டு அரசாங்க ஊழியர்களுக்கு ஜனவரிமாதச் சம்பளம் 23ந் தேதி ஞாயிற்றுக்கிழமை வழங்கப்படும் இவ்வருட விடுமுறை நாட்கள் சம்பந்தமாகத் திறைசேரி எடுத்துக்கொண்ட முடிவுகளில் மேற்கூறியது ஒன்ரும்.




## கொழும்பு

### ஞாயிறு 23 - 1 - 66

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து.

இரவு 6-10 வாத்திய இசை, 6-15 முத்துவிநாயகர்ஆலயத்திலிருந்து பஜனை-அஞ்சல், 6-45 பாட்டு, 7-30 மன்ற நாடக விழா, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பாட்டு, 10-00 மாதர் கேட்டவை.

## சுவீப் முடிவுகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்)

தலா 1,500 ரூபாபெறும் 100 அதிர்ஷ்ட டிக்கட்டுகள் வருமாறு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20 | F | 0310 | 51 | V | 0296 |
| 21 | A | 0348 | 39 | H | 0044 |
| 05 | N | 0079 | 16 | P | 0484 |
| 40 | G | 0129 | 18 | T | 0426 |
| 58 | H | 0066 | 36 | U | 0615 |
| 61 | Y | 0655 | 07 | C | 0243 |
| 33 | X | 0814 | 36 | P | 0945 |
| 50 | Q | 0288 | 08 | B | 0135 |
| 04 | C | 0492 | 48 | D | 0495 |
| 01 | X | 0142 | 51 | B | 0502 |
| 24 | O | 0482 | 22 | L | 0510 |
| 18 | Q | 0292 | 21 | R | 0417 |
| 54 | A | 0621 | 52 | U | 0998 |
| 21 | X | 0151 | 61 | L | 0813 |
| 10 | S | 0030 | 45 | D | 0204 |
| 52 | Q | 0427 | 58 | S | 0209 |
| 09 | E | 0604 | 11 | T | 0918 |
| 43 | V | 0453 | 06 | U | 0514 |
| 40 | V | 0922 | 28 | V | 0945 |
| 16 | G | 0489 | 39 | U | 0348 |
| 11 | C | 0591 | 61 | X | 0313 |
| 38 | O | 0741 | 28 | S | 0917 |
| 48 | D | 0087 | 21 | G | 0476 |
| 07 | Q | 0625 | 58 | Z | 0142 |
| 57 | D | 0770 | 04 | Q | 0298 |
| 38 | L | 0743 | 49 | V | 0460 |
| 08 | D | 0320 | 42 | G | 0030 |
| 64 | P | 0184 | 04 | C | 0666 |
| 27 | O | 0344 | 16 | R | 0027 |
| 46 | Z | 0980 | 41 | N | 0333 |
| 46 | M | 0178 | 01 | K | 0538 |
| 07 | R | 0662 | 40 | M | 0223 |
| 58 | E | 0205 | 60 | U | 0144 |
| 64 | P | 0581 | 40 | D | 0467 |
| 40 | S | 0778 | 48 | T | 0457 |
| 02 | O | 0450 | 30 | H | 0960 |
| 42 | G | 0733 | 37 | C | 0486 |
| 36 | V | 0867 | 16 | N | 0365 |
| 57 | R | 0400 | 06 | G | 0854 |
| 42 | C | 0736 | 37 | T | 0815 |
| 43 | L | 0487 | 23 | S | 0099 |
| 40 | P | 0219 | 35 | B | 04[illegible]9 |
| 40 | T | 0490 | 51 | V | 0867 |
| 62 | N | 0724 | 37 | S | 0540 |
| 11 | O | 0921 | 33 | R | 0163 |
| 12 | V | 0756 | 08 | N | 0034 |
| 53 | U | 0081 | 27 | K | 0178 |
| 24 | D | 0042 | 17 | B | 0877 |
| 40 | B | 0154 | 54 | J | 0665 |
| 18 | X | 0020 | 30 | U | 0486 |

(இவை உறுதிப்படுத்தப்படவேண்டும்.)

# மற்றத் தொகுதி விஷயங்களில் தலையிடக்கூடாது

## தமிழரசு எம். பி. க்களுக்கு தலைமைப்பீடம் உத்தரவு

திருகோணமலை, சனி
ஒரு தொகுதியின் விஷயங்களில் அந்தத் தொகுதி எம். பி. யின் அனுமதியின்றி மற்ற எம். பீக்கள் தலையிடக் கூடாது என தமிழரசுக் கட்சி எம். பீக்களை கட்சி பணித்துள்ளதாக அறியப் அறியப்படுகிறது.

திருகோணமலைத்தொகுதி சம்பந்தப்பட்ட விஷயங்களில் திருமலை எம். பீயின் நடவடிக்கைகளுக்கு மாருக மற்றத் தமிழரசு எம். பீக்கள் தலையிடுவது குறித்து தமிழரசுக்கட்சி திருகோணமலைக்கிளைப் பிரமுகர்கள் தமிழரசுத் தலைவர்களிடம் கண்டனம் தெரிவித்தனர்,

திருமலைத் தொகுதி விஷயங்களில் திருமலை எம். பி. யின் வேண்டுதலின்றி தலையிடுவதில்லையென்றும் அந்தத் தொகுதி எம். பிக்கள் அனுமதியின்றி மற்ற எம். பிக்கள் தலையிடக் கூடாதென்று எல்லாத் தமிழரசு எம்பிக்களுக்கும் செனட்டர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்படுமென்றும் சென்ற வியாழக்கிழமை தமிழரசுத் தலைவர்கள் உறுதியளித்தனர்.

படைவிலக்கம்

## ஜெனரல்கள் உடன்பாடு திட்டம்

புதுடில்லி, ஜன. 22
இந்திய—பாகிஸ்தான் எல்லையிலிருந்து இருபகுதி துருப்புக்களும் செப்டபர் 5-ம் திகதிக்கு முன்னிருந்த நிலைக்குத் திரும்பும் திட்டம் ஒன்றை ஜெனரல் சௌத்ரியும், பாகிஸ்தான் தளபதி ஜெனரல் முயாவும் தயாரித்திருக்கிருர்கள். கிழக்கு, மேற்கு பகுதிகளில் பதற்றத்தைத் தணிக்கும் விஷயத்தையும் அவர்கள் பூர்த்தி செய்திருக்கிருர்கள். இரு தளபதிகளும் இது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

## உலக இந்துமத மகாநாடு

அலஹாபாத், ஜன. 22
உலக இந்துசமய மகாநாடு இன்று அலஹாபாத்தில் ஆரம்பமானது.

பல நாடுகளைச்சேர்ந்த 250 பிரததிநிதிகள் மகாநாட்டில் கலந்துகொள்கிருர்கள். 3 நாட்கள் நடைபெறவிருக்கும் இம்மகாநாட்டில் துவாரகாபீடம் சங்கராச்சாரியார் உட்பட, 25000 பிரதிநிதிகள் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கலந்துகொள்கிருர்கள்.

ஜைனர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளும் மகாநாட்டில் கலந்துகொள்கிருர்கள்.

## இளைப்பாறும் அதிபர்

பளை, சனி
பளை அரசினர் மகாவித்தியாலயத்தில் கடந்த ஐந்து வருடகாலமாக அதிபராகக் கடமையாற்றிய திரு. வி. செல்லையா இம்மாதம் முதல் இளைப்பாறியுள்ளார். தமது சேவைக்காலத்தில் மேற்படிபாடசாலைக்கு விஞ்ஞான ஆய்வுகூடம், விவசாய ஆய்வு கூடம் முதலானவற்றை நிறுவுவதற்கு இவர்மூல கர்த்தாவாக விளங்கிஞர். இம்மாத இறுதியில் பாடசாலைமாணவர்களும் பழைய மாணவர்களும் சேர்ந்து சேவைநலம் பாராட்டுவிழா ஒன்றை நடத்த ஏற்பாடு [illegible]

## நைஜீரியப் பிரதமர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றியோ அரசாங்க அறிவிப்பில் கூறப்படவில்லை. கடத்திச்செல்லப்பட்ட நிதிமந்திரி சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற செய்தி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

சர். அபுபக்கரின் சடலம் வட நைஜீரியாவிலுள்ள அவரது சொந்த ஊரில் அடக்கம்செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.

## யாழ்ப்பணத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மணமக்கள் தங்கள் பெற்ருேர்களுடன் நல்லூர்சட்டநாதர் ஆலயத்துக்கும், நல்லூர் கந்தசாமி கோவிலுக்கும் சென்று வழிபட்டனர்.

மதியபோஜன விருந்துகள் மணமகன் இல்லத்திலும், மணமகள் இல்லத்திலும் நடைபெற்றன.

மாலையில் மணமக்களும், உறவினர்களும் விமான மூலம் கொழும்பு திரும்பினர். —டி. எம் எம்.


காணவில்லை

M 962639-ம் நம்பர் கூப்பன் தொடக்கம் M 962643-ம் நம்பர் வரையுள்ள 5 கூப்பன்கள் தவறிவிட்டன. கண்டெடுப்போர் கீழ்க்காணும் விலாசத்தில் அல்லது 'ஈழநாடு' காரியாலயத்தில் சமர்ப்பிக்கவேண்டுகிருேம். அதற்கேற்ற நன்கொடை வழங்கப்படும். சி. நவரெட்னம், வெங்காயச் சங்கம், தெல்லிப்பழை கிழக்கு. 1793

விற்பனைக்கு

கோண்டாவிலில் பலாலீ ருேட்டுக்கருகாமையில் 8 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு என். எஸ். ஆறுமுகம், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 1755


## பரிசுக்கார்கள்

பம்பலப்பிட்டி, சனி
1966, 67-ம் ஆண்டுகளில் பரிசாக வழங்குவதற்கு லொத்தர் சபை 52 கார்களை வாங்கவிருக்கிறது. ஒவ்வொன்றும் சுமார் 10,000 ரூபா பெறுமதியான 52 கார்களை வாங்குவதற்கென லொத்தர்சபை பணம் ஒதுக்கியிள்ளதுடன் அதற்கான ஏற்பாடுகளையும் செய்துவருகிறது.


REGAL—JAFFNA
NOW SHOWING
Marlon Brando
in
THE UGLY AMERICAN
(Eastman Color)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர். —பத்மினி
நடித்த
ராணி சம்யுத்தா

வேல் சினிமா
(சாவகச்சேரி)
2-வது ஜனத்திரள் வாரம்
சிவாஜி -- தேவிகா
நடித்த
கர்ணன்
(ஈஸ்ட்மெண்ட் கலர்)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி-6-30, 9-30 மணி
விடுமுறை நாட்களில் 2-30 மணி
டி. எம் சௌந்தரராஜன்
நடித்த
பட்டினத்தார்

இப்பொழுது திரையிடப்படுகிறது
கிங்ஸ்லி (கொழும்பு) நவா (கொம்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)
மொடேர்ன் (பண்டாரவளை) மொடேர்ன் (பதுளை) விஜிதா (அட்டன்)
தீவொளி (நூரளை) கல்யாணி (நாவலப்பிட்டி) சந்தியா (கம்பளை)



பூம்புகார்
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள்,
ராஜ்ஸ்ரீ, நாகேஷ் - மனோரமா, ஓ. ஏ. கே. தேவர்
மற்றும் பலர் நடித்து
அனைவரின் பாராட்டுதலைப்பெற்ற 'திரை'ஓவியம்.

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
விடுமுறை நாட்களில் காலை 10 மணிக்கு
என். டி. ராமராவ் - மாலதி
நடித்த
பாதாளபைரவி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] ஆண்டு ஜனவரி மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org